3. கவன ஈர்ப்பு

கோவை மாவட்டத்தில் பிச்சானூரில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் காலவரையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது குறித்து

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் பிச்சானூரில் உள்ள தனியார் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் காலவரையின்றி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதால், அங்குள்ள பொதுமக்கள் மாற்று ஏற்பாடு செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளனர் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பிச்சானூரிலுள்ள சர்வதேச உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களும் கோயம்புத்தூர் மாவட்ட ஆசிரியர்கள் சங்கமும், பள்ளியின் தாளாளர் திரு. வி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் மிகுந்த இடர்ப்பாடுகளைச் செய்து வருவதாக மனுக்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள். இம் மனுக்களில் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்து தரவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

(அ) குடிநீர் வசதியில்லை.

(ஆ) விஞ்ஞானக் கூடமில்லை,

(இ) சிறுநீர் கழிப்பிட வசதி அமைக்கவில்லை,

(ஈ) கணித ஆசிரியர் இல்லை,

(உ) கீழ்வகுப்புகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லை,

(ஊ) பள்ளியில் பாதுகாவலர்கள் இல்லை.

பள்ளிக் கல்வி இயக்குநருடன் கலந்தாலோசித்ததில், பள்ளியில் பணிபுரிபவர்களுக்கு ஏப்ரல் 1972 முதல் சம்பளம் பள்ளி நிர்வாகத்தினர் மூலம் கொடுக்காமல் மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக வழங்கலாம் என பரிந்துரை செய்தார். இப்பரிந்துரையை ஏற்று அரசு தக்க ஆணைகளைப் பிறப்பித்துள்ளது.

இதற்கிடையில் மேற்படி பள்ளியின் ஆசிரியர்களும் மாணவர்களும் கடந்த 17—7—1972 முதல் நிர்வாகம் மாற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து காலவரையரையின்றி வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள். மாணவர்களின் முக்கிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாணவ பிரதிநிதிகள்,

பொதுமக்கள், ஆசிரியப் பிரதிநிதிகள், பள்ளித் தாளாளர் திரு வி. ஈஸ்வர மூர்த்தி ஆகியோர் கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்று கோவை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் 5—8—1972 அன்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் பள்ளியை நிர்வகிக்க தனிக் கமிட்டி ஒன்று ஏற்படுத்த வேண்டு மென கூறப்பட்ட யோசனையை பள்ளியின் தாளாளர் திரு வி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மாணவர்களின் படிப்பு தடை படாமல் இருக்க இக் கூட்டம் ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை பிச்சானூரில் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளது. பள்ளிப் பராமரிப்புக்காக ரூ. 10,000 செலுத்துவதாகவும், பள்ளிக்கு 6 ஏக்கர் நிலம் நன்கொடையாகக் கொடுக்கவும், பள்ளிக்குப் புதிய நிலத்தில் கட்டிடம் கட்டித் தரவோ அல்லது ரூ. 12,500 கட்டிட நிதிக்காக கட்டவோ பள்ளிக் குழுவினர் ஒப்புதல் அளித் துள்ளனர். மேலும் பள்ளியை தற்காலிகமாக நடத்த திரு. மயில்சாமி கவுண்டர் அவர்கள் தங்கள் நெல் அரைவை ஆலையில் வகுப்புகள் நடத்த ஒப்புதல் அளித்துள்ளார்.

பிச்சானூரில் ஒரு அரசினர் உயர்நிலைப் பள்ளியை 6 முதல் 11 படிவங்க ளுடன் வழக்கமான நிபந்தனைகளின் பேரில் 1972-73-ம் ஆண்டு திறக்க அனுமதி வழங்கலாம் என்றும், தற்சமயம் சர்வ தேச உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர், மற்றும் ஆசிரியரல்லாதார் இவர்களில் விருப்பமுள்ளவர்களை உத்தேசிக்கப்பட்ட அரசினர் உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக பணியில் அமர்த்தலாம் என்றும் பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார். அரசு இப்பரிந்துரையை ஏற்றுள்ளது. பள்ளி திறப்பதற்காக விதிக்கப்படும் நிபந் தனைகளை நிறைவேற்றுவதன் பேரில் அனுமதியை நடைமுறைப்படுத்த பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி 1972-73-ம் ஆண்டில் பிச்சானூரில் 6 முதல் 11 படிவங்களுடன் ஓர் அரசினர் உயர்நிலைப் பள்ளியை திறக்க அனுமதி வழங்கப்படுகிறது.

[மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர்—தலைமை]

திரு. வே. தங்கப்பாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தையொட்டி மீண்டும் சில தொடர்பான விளக்கங்களைக் கல்வி அமைச்சரிடமிருந்து வேண்டுகிறேன். இந்த சர்வேதேசப் பள்ளி தாளாளர் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸவரமூர்த்தி மாணவர்களிடத்தி லிருந்து வசூலித்த ரூ. 9 ஆயிரத்துக்கு மேற்பட்ட பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகவும், பல ஆசிரியர்கள் பல மாதங்களாகச் சம்பளம் பெறவில்லை யென்றும் பல ஆசிரியர்கள் அந்தப் பள்ளியில் பழிவாங்கப்பட்டிருக் கிறார்கள் என்றும் பரவலாக குற்றச்சாட்டுகளும் கிரிமினல் குற்றச்சாட்டு

களும் இருப்பதால் அரசாங்கம் தீவிரமான விசாரணை செய்து தாளாளர் மீது நடவடிக்கை எடுக்க தீவிர முயற்சி மேற்கொண்டால், இது போன்ற தனியார் பள்ளிகளில் பொறுப்பான சட்டமன்ற உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டது என்றால், தனியார் பள்ளிகளில் குறைபாடுகள் ஏற்படுவதைத் தடுக்க ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுமுன் ஒரு விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். பொதுவாக ஒரு அங் கத்தினரைப் பற்றிய விஷயம். அவர் இல்லாத நேரத்தில் அவர் மாணவர் களிடமிருந்து வாங்கிய ரூ. 9 ஆயிரத்தைப் பயன்படுத்திக் கொண்டார் என்று சொல்லுவது சரியல்ல. அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது குற்றச் சாட்டுகளைச் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் சொல்லி ஒரு அங்கத்தினரை அகௌரவப் படுத்துவது அவ்வளவு நல்லதல்ல. அப்படி யிருந்தால் அமைச்சர் அவர்களே தன் விளக்கத்தில் சொல்லியிருப்பார்கள். பொதுவாக இம்மாதிரிக் கவன ஈர்ப்பு வரும்போது, மறுமுறை கேள்வி கேட்பது விதிக்கு அப்பாற்பட்டது. அமைச்சர் அவர்கள் முதலில் சொல்லி யிருக்கலாம். அங்கத்தினர் கேட்பது சரியில்லையென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தாளாளர் என்று சொன்னால் மட்டும் போதும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கொண்டுவந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது சில விளக்கங்கள் தந்தேன். அதன் பிறகு அவர் பள்ளியினுடைய தாளாளர் மீது குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அதுபற்றி விவரக் குறிப்பு எதுவும் என்னிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இருக்குமானால், உள்ளபடியே விசாரிக்கப்படவேண்டிய ஒன்றுதான். குற்றச்சாட்டுகள் மீது தக்க நடவடிக்கை கல்வித் துறையினர் எடுத்துக் கொள்ளுவார்கள். இப்போது அங்குள்ள பள்ளி நடைபெறாமல் இருக்கிறது. அந்த சூழ்நிலையை அகற்ற என்ன செய்யலாம் என்று தாளாளர் அவர்களை வைத்து சமாசமான முடிவு செய்யப்பட்டது. அந்தக் கமிட்டியை மாற்றி அமைக்கச் சொன்னார்கள். அதற்கு தாளாளர் இணங்கவில்லை. ஒரு தனிப் பள்ளி வைப்பதற்கு ஆட்சேபணையில்லை என்று சொல்லிவிட்டார். அதன்

பேரில் பணி துவங்கப்பட இருக்கிறது, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டுகளைத் தாங்களாக அங்குள்ள மக்கள் எழுதியனுப்பியிருந்தால், அதன் மீது பரிசிலனை செய்து விசாரணை செய்ய தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் : அதன் மீது விவாதம் நடத்த முடியாது.

திரு. செ. முத்துசாமி : ஒரு விளக்கம்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : அனுமதிப்பது இல்லை. மற்ற அங்கத்தினர்கள் பேசுவதாக இருந்தால் விவாதம் ஆகிவிடும்.

திரு. செ. முத்துசாமி : வேறு விளக்கம் தான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்டமன்ற துணைத் தலைவர் : கவன ஈர்ப்பு கொண்டு வந்தவர் தான் விளக்கம் கேட்கலாம். முன் கூட்டியே அறிவிப்பு கொடுத்து அனுமதி பெற்றிருந்தால் அனுமதிக்க முடியும். ஒவ்வொரு விஷயத்தையும் கேட்டுக் கொண்டே போகலாம். இப்போது துணை அறிக்கையின் மீது விவாதம் தொடங்கும்.

4. 1972-73-ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த துணை விவர அறிக்கை மீது விவாதம்.

* **திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்கு இடமில்லாதபடி நல்ல சூழ்நிலையில் இந்த விவாதத்தை ஆரம்பிக்கிறேன் என்று கருதுகிறேன். தங்களுடைய அனுமதியுடன் ஒரு சில விஷயங்களை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். உறுப்பினர்கள் 'One Man Commission Anomalies Report' வேண்டுமென்று துடிக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அதை என்னுடைய பேச்சிலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். முரண்பாடுகள் குழு சிபாரிசுகளை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அரசின் நல்லெண்ணத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். எல்லோரும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். 136 ஆயிரம் பேர்களுக்கு ரூ. 4 கோடி செலவுக்குத் தயங்காதபடி சிப்பந்திகள், ஊழியர்கள் நலனுக்காக அரசு செவழிக்க முன்வந்துள்ளது. அதைப் பாராட்ட வேண்டும். அன்று செய்தித் தாளில் பார்த்தவுடன் எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நம்பினோம். ஆனால் இப்போதும் மேலும் கடிதம்